**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை – 2023**

---

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் 2024 நவம்பர் 29 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறதிக் கணக்கு அறிக்கைக்காக 2024 மே மாதம் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் பின்னர் கணக்கேடுகளைப் பரீசித்த போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்ய வேண்டி இருந்ததாக பணிப்பாளரால் (நிதி மற்றும் நிர்வாகம்) அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) 2024 ஒக்தோபர் மாதம் 06 ஆம் திகதியில் இருந்து பதவியில் இருந்து விலகிச் சென்றமையினால் புதிய வேலைத் திட்டம் ஒன்று தயாரித்து விரைவாக கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவு | சபையின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பேரேட்டுக் குறிப்புக்கள் தொடர்ச்சியாக, நாளது வரையாக பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்படாமல் | 2024 ஆம் ஆண்டில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள், கணக்கீட்டு மென்பொருளின் மூலம் கணக்கீடு செய்வதற்காக கணக்குப் பிரிவின் | சகல கொடுக்கல் வாங்கல்களும் தொடர்ச்சியாக வும் நாளது வரையாகவும் பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்ததுடன் 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையில் 2023 ஆம் ஆண்டின் கொடுக்கல் வாங்கல்கள் கணனி மென் பொருளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2024 சனவரி மாதம் முதல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் பதியப்படாமல் காசேடு தவிர ஏனைய பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடல் மற்றும் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கணக்கீடு செய்ய வேண்டிய கொடுக்கல் வாங்கல்கள் கால ரீதியில் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகத்தர்களுக்கு உரிய ஆலோசனை வழங்காதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) 2024 ஒக்தோபர் மாதம் 06 ஆம் திகதியில் தமது விருப்பத்தின் பெயரில் விலகிச் சென்றிருந்தார். அதன் பிரகாரம் கணக்கீடு செய்தல் தாமதமடைந்து 2024 ஆம் ஆண்டின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்குவதற்காக புதிய வேலைத் திட்டம் ஒன்று தயாரித்து கணக்கீட்டு முறைமை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபைச் சட்டம் | | | |
| (i) | 12 (2) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | நூலகம் மற்றும் ஆவண வழங்கல் தொடர்பான தேசிய ஒதுக்கத்தில் உள்ளடக்கும் விடயங்கள் 2015 ஆம் ஆண்டின் போது புதிய நூலக தகவல் முகாமைத்துவ முறைமையில் உள்ளடக்கும் போது 330,228 விடயங்கள் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் உள்ளடக்கப்பட்ட விடயங்களிலும் சில தரவுகள் பிழையாக இருந்தமையால் பயனாளிகளுக்கு | கோஹா தரவு அடிப்படையில் உள்ளடக்கப்படாத 496,468 பழைய வெளியீடுகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளடக்குவதற்காக செயற்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் பிரகாரம் அந்த அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளரின் மூலம் தேசிய திட்டமிடல் | நூலக தகவல் முகாமைத்துவ முறைமையை நாளது வரையாக்கி பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இந்த வளங்களை பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அதில் எந்தவொரு பயன்பாட்டு பதிவேடுகளிலும் உள்ளடக்கப்படாத புத்தங்கள் புதிய நூலக முகாமைத்துவ முறைமையில் (KOHA) உள்ளடக்குதலின் செயல் முன்னேற்றமும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட வில்லை. | திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தேசிய நூலகங்களில் சேர்கின்ற முறையான மற்றும் செயற்திறனாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ii) | 12 (2) (எ) பிரிவு | நூல் பெயர்வழிக் கோவை வெளியிட வேண்டிய காலப் பகுதி தீர்மானிக்கப்படாது இருந்ததுடன் 2024 நவம்பர் 05 ஆம் திகதி வரையில் 2024 மார்ச் வரை வெளியீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்து 2023 திசெம்பர் மாதம் வரை மாத்திரம் நூல் பெயர்வழிக்கோவை அச்சிடப்பட்டிருந்தது. | இலங்கை தேசிய நூல் பெயர் வழிக் கோவையில் மாதாந்த வலயங்களுக்காக பல்வேறு மூலங்களின் மூலம் நூற்களின் ஆய்வுரீதியான தரவுகள் பெறப்பட்டதுடன் அந்த தகவல்களை கணனி மயப்படுத்துதல், வகை இலக்கம் இடுதல், விடய தலைப்பை இடுதல், சரி பிழை பரீட்சித்தல், இறுதிப் பிரதிகளை தயாரித்தல், அச்சிடல் மற்றும் வெளியிடுவதற்கான காலம் என்பவற்றின் பிரகாரம் இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756, 757 | தேசிய நூலகத்தின் பாதுகாக்கப்பட்ட வளங்கள் மீளாய்வாண்டின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில் லை. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தேசிய நூலக பாதுகாக்கப்பட்ட புத்தக இருப்பு கட்டம் கட்டமாக மெய்மையாய்வு செய்வதற்காக 2023 ஆம் ஆண்டு முதல் உள்ளக திட்டம் ஒன்றின் பிரகாரம் | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன் முதலாவது கட்டத்தின் கீழ் KOHA தரவு அடிப்படையில் ஆரம்பத்தில் உள்ளடக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இருப்பு மெய்மையாய்வு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதன் இரண்டாவது கட்டத்தின் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் இறுதி அறிக்கையும் எதிர்காலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | |
| (ஈ) | 2019 யூலை 25 ஆம் திகதிய இலக்கம் SC&PMU/Grant /19 என்ற வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் மற்றும் இணக்கப்பாடு இன்றி 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கனேடிய பொது கற்கை சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட வெளிநாட்டு மானியம் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் ரூபா 30 மில்லியன் சபைக்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு கணக்குகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்குவதற்காக உரிய செயற்திட்ட அறிக்கையுடன் கடிதம் ஒன்று 2023.02.14 ஆம் திகதி அனுப்பபட்டுள்ளது. அவ்வாறே அதற்குரிய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளருடன் 2024.01.12 ஆம் திகதி நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்து மீண்டும் கடிதம் ஒன்று 2024.07.24 ஆந் திகதி கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ | 1978 திசெம்பர் | 2022 திசெம்பர் 31 | தற்போது நிலையான | நிலையான |

| | | | | |
|---|---|---|---|---|
| ) | 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | இல் உள்ளவாறு கிரயம் ரூபா 383,231,029 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுள்ள து. | சொத்து பதிவேடு நாளது வரையாக்கி பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்து செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நூலக ஆவண வளங்கள் ஒதுக்கத்தின் நோக்கத்தை சரியாக பேணிச் செல்வதற்காக அதில் ஸ்தாபிக்கப்பட்ட வளிப் பதனாக்கி முறைமை 24 மணி நேரமும் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் மின்சாரக் கட்டணம் உயர்வடைந்து சென்றதன் காரணமாக வார நாட்களில் 17 மணித்தியாலமும், வார இறுதி மற்றும் விடுமுறை தினங்களில் 24 மணித்தியாலமும் வளிப் பதனாக்கி முறைமை செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலைமையில் பாதுகாத்தல் பணிகளை உச்ச அளவில் பேணிச் செல்வது தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தமையால் மாற்று வலுசக்தி மூலம் ஒன்றின் மூலமேனும் மின்வலு தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சபையின் மின்சார முறைமையில் முறையாக ஸ்தாபிக்காமையின் காரணமாக மற்றும் மின்சாரப் பட்டியலைக் குறைத்துக் கொள்வதற்காக தற்போது அலுவலக நேரம் முடிவடைந்த பின்னர் வளிப்பதனாக்கி முறைமை செயற்படுத்தப்படுவது இல்லை எனவும் மற்றும் மின்சார பட்டியலை குறைத்துக் கொள்வதற்காக சூரியகலங்கள் (Solar Power) சபையில் பொருத்துவதற்காக தேவையான அறிக்கை ஒன்று சூரிய வலு சக்தி அதிகார சபையில் இருந்து பெற்று செயற்திட்ட அறிக்கையுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும். | தேசிய நூலக ஆவண வளங்கள் ஒதுக்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பிரதான கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் வேலைகள் வரி இன்றி ரூபா 211,937,795 | கட்டிடத்தின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளில் மிகுதி | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பெறுமதியில் 09 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக 2018 சனவரி 24 ஆந் திகதி ஒப்பந்தக் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. பின்னர் 03 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு மொத்தமாக ரூபா 252,462,612 ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருக்கும் போது 2021 மார்ச் மாதத்தின் போது ஒப்பந்தம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | வேலைகள் (சிவில்) பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சின் மூலம் மேல் மாகாண பொறியியல் பிரிவிற்கு கையளிக்கப்பட்டதுடன் அதற்காக 2024 ஆம் ஆண்டிற்கு தேவையான நிதியேற்பாடும் விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சின தினங்களில் கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதையும் அறியத்தருகின்றோம். | எடுத்து நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்ய வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆய்வு கூடத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 3,111,195 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட துளை நிரப்பும் இயந்திரம் மற்றும் வெப்பநிலை மற்றும் ஈரப்பதனை கட்டுப்படுத்தும் உபகரணம் 2018 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துளை நிரப்பும் இயந்திரம் தற்போது பழுது பார்க்கப்பட்டுள்ள போதும் இயந்திரத்திற்குத் தேவையான காகிதக் கூழ் pulp மற்றும் அவை தயாரித்துக் கொள்வதற்கு கலவை இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. வெப்பநிலை மற்றும் ஈரப்பதன் கட்டுப்படுத்தும் இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆவண வளங்கள் ஒதுக்கத்தின் பாதுகாப்புப் பணிகளை உச்ச அளவில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2,992,265 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட RFID Barcode Reader இயந்திரம் வருடாந்தம் சேவிஸ் செய்வதற்காக ரூபா 316,691 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் நுழைவு மற்றும் வெளிச் செல்லும் கதவுகளுக்காக இலத்திரனியல் கதவு ஸ்தாபிக்கப்படாமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்து கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்காக RFID பாதுப்பு வாயிற் கதவு கொள்வனவு செய்வதற்குரிய மாதிரிகள் தயாரிக்கப்பட்ட போதும் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு கிடைக்காமையினால் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போதும் அதற்கான நிதி ஒதுக்கப்படாமையினால் 2025 இன் பாதீட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |